# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 243/2004**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | வரதன் (எ) வரதராஜன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | துரைசாமி | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 56 | நாள் | .. | 26.06.2025 |
| கிராமம் | .. | தேவண்ணகவுண்டனூர் | | | |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26-ஆம் நாள் வியாழக்கிழமை வரதன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திருமதி. இரா.இளமதி பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

8-ம் பிரதிவாதி தரப்பு 3 ஆம் சாட்சியின் முதல் விசாரணை

இந்த வழக்கிற்கு சாட்சி சொல்வதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையை 24.06.2025 தேதியன்று பெற்றுக் கொண்டேன். அழைப்பாணையில் என்ன குறிப்பிட்டிருந்தது என்றால், 09.12.1994 தேதியன்று எல்லப்பாளையம் ஊரைச் சேர்ந்த ரத்தினசாமி என்பவர் அரசுக்கு சேலம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 302/1994 என்ற உயில் சாசனத்தை எழுதினார் என்றும், அதில் எனது தகப்பனார் காலஞ்சென்ற P.துரைசாமி த/பெ. பரமசிவகவுண்டர் கல்லம்பாளையம், அரசிராமணி கிராமம் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும், அது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்றத்திலிருந்து சார்வு செய்யப்பட்ட சம்மன் **EX.X1**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனார் P.துரைசாமி அவர்கள் எப்பொழுது இறந்தார் என்றால், சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். எல்லப்பாளையத்தை சேர்ந்த ரத்தினசாமியை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அவரை எனக்கு எப்படி தெரியும் என்றால், எனது சிறுவயதிலிருந்து எனது தகப்பனாரும் மற்றும் ரத்தினசாமியும் நண்பர்களாக இருந்தார்கள். ரத்தினசாமி எனது வீட்டிற்கு வந்து செல்வாரா என்றால், வாரத்தில் 2 முறை வந்து பேசிவிட்டு செல்வார். அதேபோல் எனது தகப்பனாரும் அவரது வீட்டிற்கு சென்று பேசிவிட்டு வருவார். நல்லது கெட்டது என்றால் இருவரும் ஒன்றாக கலந்து கொள்வார்களா என்றால், ஆமாம். 1994-ல் ஏற்படுத்தப்பட்ட உயில்

சாசனத்தை பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால், 1994-ல் காலை சுமார் 6.00 மணியளவில் எனது தகப்பனாரும் ரத்தினசாமியும் புறப்பட்டு சென்றார்கள். இரவு 9.00 மணிக்கு திரும்பி வந்தார்கள். அன்று ஒரு மஞ்சப்பையை என்னிடம் எனது தகப்பனார் கொடுத்துவிட்டு மேற்படி ரத்தினசாமியை அவர் வீட்டிற்கு அழைத்து சென்று விட்டுவிட்டு வந்தார். வந்தபின்பு அந்த மஞ்சப்பையை திருப்பி தருமாறு எனது தந்தை கேட்டார். அதை வாங்கி பத்திரமாக வைத்துவிட்டு நான் அது குறித்து கேட்டதற்கு மேற்படி தாத்தா ரத்தினசாமி அவர்கள் தனது சொத்துக்களை அரசுக்கு எழுதி வைத்துவிட்டதாக சொன்னார். அந்த ஆவணத்தை என்னை பாதுகாப்பாக வைத்திருக்கும்படி என்னிடம் சொன்னார். பின்னர் அந்த ஆவணத்தை பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை ரத்தினசாமி என்பவர் எனது வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தாரா என்றால், ஆமாம். ரத்தினசாமி எப்பொழுது இறந்தார் என்றால், 1999-ம் ஆண்டு இறந்தார். அவருடைய இறப்பிற்கு எனது தகப்பனார் சென்றிருந்தாரா என்றால், அவருடைய இறுதிச்சடங்கில் கலந்து கொண்டார். பிறகு அந்த மஞ்சப்பையை எனது தகப்பனார் என்ன செய்தார் என்றால், மேற்படி ரத்தினசாமி இறந்த தேதியிலிருந்து சுமார் 1 வாரம் கழித்து அரசிராமணி பேரூராட்சியில் அவருடைய இறப்பு சான்றிதழ் பெற்று அரசாங்கத்திடம் மேற்படி ஆவணத்தை ஒப்படைத்தார். எனது தகப்பனார் ஆங்கிலம் அல்லது தமிழில் கையொப்பம் செய்வாரா என்றால், P என்ற இன்சில் ஆங்கிலத்திலும் துரைசாமி என தமிழிலும் கையொப்பம் செய்வார். என்னிடம் காட்டப்படும் EX.B15 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பங்கள் யார் செய்துள்ளார் என்றால், ஆவணத்தில் எழுத்து சிறியதாக உள்ளதால் என்னால் படிக்க இயலவில்லை. படித்து பார்த்ததில் எனது தகப்பனார் பெயர் அதில் உள்ளது. (ஜெராக்ஸ் ஆவணம் குறித்து கேள்வி கேட்பதில் ஆட்சேபணை குறித்து இருதரப்பு வாதங்களை முன்வைக்கும் பொருட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R
Digitally signed by ELAMATHI R
Date: 2025.06.27 11:57:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.